1974 ஏப்ரல் 3]

சட்டிடத்தில் இருக்கின்றன. வாடகையாக ஆண்டுக்கு 10,60,711 ரூபாய்க்குமேல் கொடுக்கிறது. ஒருகோடி கட்டிடத்திற்குச் செலவானாலும் சீக்கிரமே அந்தப் பணம் வாடகை மிச்சமாக வந்துவிடும் என்கிற வேண்டுகோளையும் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

குன்றத்தூர் பகுதியில் புலிகள்

*738 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூர் அருகே வாழும் கிராமத்தார்களை 29—3—1973-ம் நாள் அளவில், புலிகள் தாக்கின என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Tamil Nadu Dairy Development Corporation.

*739 Q.--THIRU N. K. PALANISAMY: Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation had in recent times produced a cattle feed scientifically; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பால்வள நிறுவனம், ஈரோட்டில் கால்நடைத் தீவனத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகிறது. இதன் உற்பத்தித் திறன், மணிக்கு அரை டன் ஆகும். ஈரோடு பால்பண்ணைக்குப் பால் வழங்குகின்ற உழவர்களுக்கும், இந்தக் கால்நடைத் தீவனம் வழங்கப் படுகிறது.

*740 Q.--THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation had, in colloboration with the banks, started in recent times a scheme to finance small farmers; and

(b) if so, the details thereof?